**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**
**முன்னிலை: திருமதி.N.ஷர்மிளா, B.A.,B.L.,**
**சார்பு நீதிபதி, சத்தியமங்கலம்**

2023-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21-ம் நாள் வெள்ளிக்கிழமை
(2053 திருவள்ளுவராண்டு ஸ்ரீ சோபகிருது வருடம் சித்திரைத்திங்கள் 08-ம் நாள்)

<u>அசல் வழக்கு எண்.21/2022</u>

**CNR No: TNED**050006732021

N.சிவனப்பன் ...வாதி

/எதிர்/

1.R.முத்துலட்சுமி
2.ஸ்ரீதேவி
3.R.சுனிதா ...பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 19.04.2023-ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.எஸ்.ராஜகோபால் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் ஒருதலைபட்ச மாக்கப்பட்டும், வாதி தரப்பில் கேட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற ஆய்விலிருந்து வந்த இவ்வழக்கில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

<u>**தீ ர் ப் பு ரை**</u>

இந்த தாவாவானது, வழக்கு கோருரிமை தொகை ரூ.5,40,266/-க்கு வழக்கு தேதியிலிருந்து 12% பின்வட்டியையும் வழக்கு செலவு தொகையும் வாதிக்கு பிரதிவாதிகளால் செலுத்தப்பட வேண்டுமென வேண்டி, கட்டளை 7 விதி 1-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>வழக்குரையின் சுருக்கம்:</u>

வாதி தரப்பு சங்கதியானது, 1-ம் பிரதிவாதி காலஞ்சென்ற P.V.ரங்கசாமியின் மனைவி. 2, 3 பிரதிவாதிகளின் அவரது மகள்கள் ஆக வேண்டும். மேற்படி P.V.ரங்கசாமி அவர்கள் கடந்த 11.02.2021-ம் தேதியன்று காலமாகிவிட்டார். மேற்படி காலஞ்சென்ற P.V.ரங்கசாமி அவர்கள் கடந்த 12.01.2019-ம் தேதியன்று பிரதிவாதிகளின் குடும்ப செலவுக்காக அவசர நிமித்தமாக ரூ.4,00,000/- வாதியிடமிருந்து கடனாகப் பெற்றுள்ளார். மேற்படி கடன் தொகைக்கு ஆண்டுக்கு ஒன்றுக்கு ரூ.100/-க்கு 12% வட்டி என்றும் மேற்படி கடன் தொகைக்கு 1ம் பிரதிவாதியின் கணவரும் 2, 3 பிரதிவாதிகள் தகப்பனாருமான P.V.ரங்கசாமி அவர்கள் அதற்காக கடந்த 12.01.2019-ம் தேதியன்று வாதிக்கு ரூ.4,00,000/-த்திற்கு ஒரு கடனுறுதிச் சீட்டு எழுதி கொடுத்திருந்தார். இந்நிலையில் மேற்படி P.V.ரங்கசாமி கடந்த 11.02.2021ம் தேதியன்று திடிரென்று காலமாகிவிட்டார். மேற்படி கடனுறுதிச் சீட்டு அசல் மற்றும் நகல் இத்துடன் தாக்கல் செய்யப்படுகிறது. மேற்படி திரு.P.V.ரங்கசாமி அவர்கள் காலமான பின்பு சுமார் 1 மாதம் கழித்து வாதி மேற்படி பிரதிவாதிகளிடம் மேற்படி கடன் தொகையையும், அதற்குண்டான வட்டியையும் உடனடியாக செலுத்தும்படி கேட்டார். அதற்கு பிரதிவாதிகள் எற்கனவே முதலில் மேற்படி P.V.ரங்கசாமி அவர்கள் வாதியின் மகளான N.S.கமலாதேவியிடமிருந்து கடன் பெற்றிருந்த ரூ.3,00,000/-த்தை சுமார் ஒரு மாத தவணையில் கொடுத்து விடுவதாக கூறியிருந்தார்கள். அதன் படியே கடந்த 26.04.2021-ம் தேதியன்று 2, 3 பிரதிவாதிகள் ஏற்கனவே P.V.ரங்கசாமி அவர்கள் பெற்றிருந்த கடனை ஒப்புக்கொண்டு வாதியிடம் ரூ.3,00,000/-த்தை செலுத்தியதன் பேரில் அவரும் அதற்காக ஒரு ரசீதும் கொடுத்துள்ளார். மேற்படி ரசீதை 2, 3 பிரதிவாதிகள் வாட்ஸ் ஆப் மூலமும் அனுப்பியுள்ளார்கள். பின்னர் மேற்படி P.V.ரங்கசாமி ரூ.3,00,000/-த்திற்கு எழுதிக் கொடுத்த கடனுறுதிச் சீட்டை திரும்பப் பெற்றுக் கொண்டுள்ளார்கள். அதன் பிறகு வாதி அனுப்பிய இந்த நோட்டீஸில்

கண்ட கடனுறுதிச் சீட்டு தொகை செலுத்துவதற்கு சிறிது கால அவகாசம் தேவைப்படுகிறது என்றும் அதன் பின்னர் அசலையும், வட்டியையும் ஒட்டு மொத்தமாக சேர்த்து கொடுத்து விடுவதாக பிரதிவாதிகள் உறுதி அளித்தார்கள். வாதியும் பிரதிவாதிகள் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு விரைவில் மேற்படி அசலையும் அதற்கான வட்டித் தொகையையும் கொடுத்து விட வேண்டும் என்று தெரிவித்தார். அதற்கு பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டார்கள். அதன் பிறகு பிரதிவாதிகள் மேற்சொன்னபடி மேற்படி அசல் மற்றும் வட்டித் தொகையினை வாதிக்கு திருப்பி செலுத்தாததால், வாதி பிரதிவாதிகளிடம் மேற்படி அசல் மற்றும் வட்டித் தொகையை விரைவில் செலுத்தும்படி பலமுறை நேரில் கேட்டு வந்தார். ஆனால் பிரதிவாதிகள் மேற்படி தொகையினை திருப்பி செலுத்தாமல் பல்வேறு சாக்குபோக்கு சொல்லி காலம் கடத்தி வந்தார்கள். வாதி பலமுறை திரும்ப கேட்டு பிரதிவாதிகள் மேற்படி அசல் தொகை மற்றும் வட்டி தொகையை வாதிக்கு திருப்பிக் கொடுக்கவில்லை. வாதிக்கு சேரவேண்டிய மேற்படி அசல் மற்றும் அதற்கான வட்டித்தொகையினை ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் பிரதிவாதிகள் செயல்பட்டு வருகிறார்கள். மேலும் வாதிக்கு கொடுக்க வேண்டிய அசல் மற்றும் வட்டித் தொகையினை கொடுக்காமல் இக்கரைத்தத்தப்பள்ளி கிராமத்தில் உள்ள புதிய க.ச.326/3D, 326/3E மற்றும் வெள்ளியம் பாளையம்புதூரில் உள்ள கதவு எண்.62-A வீட்டையும், அருகில் உள்ள காலியிடத்தையும் பிரதிவாதிகளின் குடும்ப சொத்துக்களை அவசர அவசரமாக வாதிக்கு தெரியாமல் மூன்றாம் நபருக்கு விற்பனை செய்ய முயற்சிகள் செய்து வருவதாக வாதிக்கு விசாரித்த வகையில் தெரிய வருகிறது. அதனால் வாதியானவர் கடந்த 15.11.2021 ம் தேதியன்று பிரதிவாதிகளுக்கு அவரது வழக்குரைஞர் மூலம் கடனுறுதிச் சீட்டிற்கான அசல் மற்றும் வட்டி தொகையை திருப்பி செலுத்தக்கோரி கால அவகாசம் கொடுத்து பதிவு அஞ்சல் அனுப்பினார். அதனை 1-ம் பிரதிவாதி கடந்த 16.11.2021-ம் தேதியிலும், 2-ம் பிரதிவாதி கடந்த 17.11.2021 ம் தேதியிலும், 3-ம் பிரதிவாதி கடந்த

16.11.2021-ம் தேதியிலும் பெற்றுக் கொண்டுள்ளார்கள். 1-ம் வாதிக்கு இக்கரைத்ததப்பள்ளி கிராமத்திற்கு அனுப்பிய பதிவு அஞ்சல் திரும்ப வந்து விட்டது. மேற்படி வாதியின் வழக்குரைஞரின் அறிவிப்புக்கு 3-ம் பிரதிவாதி 23.11.2021-ம் தேதியில் பல பொய்யான சங்கதிகளை கூறி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அதே போல் 2-ம் பிரதிவாதியும் கடந்த 30.11.2021-ம் தேதியன்று பல்வேறு பொய்யான சங்கதிகளை கண்டு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேலும் வாதி பலமுறை நேரிலும் மற்றவர்கள் மூலமாகவும் கேட்டு கடனுறுதிச் சீட்டு வசூல் ஆகாததால் அவர் கடனுறுதிச் சீட்டின் அசல் மற்றும் வட்டி வசூல் செய்ய வேண்டி மேற்படி இவ்வழக்கினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறார் என்றும், முன் வைக்கப்பட்டுள்ளது.

3. பிரதிவாதிகளுக்கு, நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்டும், நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதால் 13.03.2023 அன்று ஒருதலைப்பட்சமாக கருதப்பட்டுள்ளார்.

**<u>4. எனவே, இந்த வழக்கில் தீர்வு செய்யப்படவேண்டிய பிரச்சினை யாதெனில்,</u>**

இந்த வழக்கு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதாகும்.

**<u>5. சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

இந்த வழக்கில் வாதி திரு.சிவனப்பன், வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. திரு.ரவிச்சந்திரன் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. பிரதிவாதிகள் இந்த வழக்கில் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார்.

6. **<u>தீர்வு:</u>**

**6.1.** வாதி தரப்பில் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. தாவா கடனுறுதிச்சீட்டின் அடிப்படையிலான தாவா தொகை ரூ.5,40,266/-ம் பின் வட்டி சேர்த்து பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்த வேண்டுமென்று இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பு வழக்கை நிரூபிக்க, வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**6.2.** வாதி தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில், 1-ம் பிரதிவாதி காலஞ்சென்ற P.V.ரங்கசாமியின் மனைவி என்றும், 2, 3 பிரதிவாதிகளின் அவரது மகள்கள் ஆக வேண்டும் என்றும், மேற்படி P.V.ரங்கசாமி அவர்கள் கடந்த 11.02.2021-ம் தேதியன்று காலமாகிவிட்டார் என்றும், மேற்படி காலஞ்சென்ற P.V.ரங்கசாமி அவர்கள் கடந்த 12.01.2019-ம் தேதியன்று பிரதிவாதிகளின் குடும்ப செலவுக்காக அவசர நிமித்தமாக ரூ.4,00,000/- வாதியிடமிருந்து கடனாகப் பெற்றுள்ளார் என்றும், மேற்படி கடன் தொகைக்கு ஆண்டுக்கு ஒன்றுக்கு ரூ.100/-க்கு 12% வட்டி என்றும் மேற்படி கடன் தொகைக்கு 1ம் பிரதிவாதியின் கணவரும் 2, 3 பிரதிவாதிகள் தகப்பனாருமான P.V.ரங்கசாமி அவர்கள் அதற்காக கடந்த 12.01.2019-ம் தேதியன்று வாதிக்கு ரூ.4,00,000/-த்திற்கு ஒரு கடனுறுதிச் சீட்டு எழுதி கொடுத்திருந்தார் என்றும், இந்நிலையில் மேற்படி P.V.ரங்கசாமி கடந்த 11.02.2021ம் தேதியன்று திடிரென்று காலமாகிவிட்டார் என்றும், மேற்படி கடனுறுதிச் சீட்டு அசல் மற்றும் நகல் இத்துடன் தாக்கல் செய்யப்படுகிறது என்றும், மேற்படி திரு.P.V.ரங்கசாமி அவர்கள் காலமான பின்பு சுமார் 1 மாதம் கழித்து வாதி மேற்படி பிரதிவாதிகளிடம் மேற்படி கடன் தொகையையும், அதற்குண்டான வட்டியையும் உடனடியாக செலுத்தும்படி கேட்டார் என்றும், அதற்கு

பிரதிவாதிகள் எற்கனவே முதலில் மேற்படி P.V.ரங்கசாமி அவர்கள் வாதியின் மகளான N.S.கமலாதேவியிடமிருந்து கடன் பெற்றிருந்த ரூ.3,00,000/-த்தை சுமார் ஒரு மாத தவணையில் கொடுத்து விடுவதாக கூறியிருந்தார்கள் என்றும், அதன் படியே கடந்த 26.04.2021-ம் தேதியன்று 2, 3 பிரதிவாதிகள் ஏற்கனவே P.V.ரங்கசாமி அவர்கள் பெற்றிருந்த கடனை ஒப்புக்கொண்டு வாதியிடம் ரூ.3,00,000/-த்தை செலுத்தியதன் பேரில் அவரும் அதற்காக ஒரு ரசீதும் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி ரசீதை 2, 3 பிரதிவாதிகள் வாட்ஸ் ஆப் மூலமும் அனுப்பியுள்ளார்கள் என்றும், பின்னர் மேற்படி P.V.ரங்கசாமி ரூ.3,00,000/-த்திற்கு எழுதிக் கொடுத்த கடனுறுதிச் சீட்டை திரும்பப் பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்றும், அதன் பிறகு வாதி அனுப்பிய இந்த நோட்டீஸில் கண்ட கடனுறுதிச் சீட்டு தொகை செலுத்துவதற்கு சிறிது கால அவகாசம் தேவைப்படுகிறது என்றும் அதன் பின்னர் அசலையும், வட்டியையும் ஒட்டு மொத்தமாக சேர்த்து கொடுத்து விடுவதாக பிரதிவாதிகள் உறுதி அளித்தார்கள் என்றும், வாதியும் பிரதிவாதிகள் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு விரைவில் மேற்படி அசலையும் அதற்கான வட்டித் தொகையையும் கொடுத்து விட வேண்டும் என்று தெரிவித்தார் என்றும், அதற்கு பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டார்கள் என்றும், அதன் பிறகு பிரதிவாதிகள் மேற்சொன்னபடி மேற்படி அசல் மற்றும் வட்டித் தொகையினை வாதிக்கு திருப்பி செலுத்தாததால், வாதி பிரதிவாதிகளிடம் மேற்படி அசல் மற்றும் வட்டித் தொகையை விரைவில் செலுத்தும்படி பலமுறை நேரில் கேட்டு வந்தார் என்றும், ஆனால் பிரதிவாதிகள் மேற்படி தொகையினை திருப்பி செலுத்தாமல் பல்வேறு சாக்குபோக்கு சொல்லி காலம் கடத்தி வந்தார்கள் என்றும், வாதி பலமுறை திரும்ப கேட்டு பிரதிவாதிகள் மேற்படி அசல் தொகை மற்றும் வட்டி தொகையை வாதிக்கு திருப்பிக் கொடுக்கவில்லை என்றும், வாதிக்கு சேரவேண்டிய மேற்படி அசல் மற்றும் அதற்கான வட்டித்தொகையினை ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் பிரதிவாதிகள் செயல்பட்டு வருகிறார்கள் என்றும், மேலும் வாதிக்கு கொடுக்க

வேண்டிய அசல் மற்றும் வட்டித் தொகையினை கொடுக்காமல் இக்கரைத்ததப்பள்ளி கிராமத்தில் உள்ள புதிய க.ச.326/3D, 326/3E மற்றும் வெள்ளியம் பாளையம்புதூரில் உள்ள கதவு எண்.62-A வீட்டையும், அருகில் உள்ள காலியிடத்தையும் பிரதிவாதிகளின் குடும்ப சொத்துக்களை அவசர அவசரமாக வாதிக்கு தெரியாமல் மூன்றாம் நபருக்கு விற்பனை செய்ய முயற்சிகள் செய்து வருவதாக வாதிக்கு விசாரித்த வகையில் தெரிய வருகிறது என்றும், அதனால் வாதியானவர் கடந்த 15.11.2021 ம் தேதியன்று பிரதிவாதிகளுக்கு அவரது வழக்குரைஞர் மூலம் கடனுறுதிச் சீட்டிற்கான அசல் மற்றும் வட்டி தொகையை திருப்பி செலுத்தக்கோரி கால அவகாசம் கொடுத்து பதிவு அஞ்சல் அனுப்பினார் என்றும், அதனை 1-ம் பிரதிவாதி கடந்த 16.11.2021-ம் தேதியிலும், 2-ம் பிரதிவாதி கடந்த 17.11.2021 ம் தேதியிலும், 3-ம் பிரதிவாதி கடந்த 16.11.2021-ம் தேதியிலும் பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்றும், 1-ம் வாதிக்கு இக்கரைத்ததப்பள்ளி கிராமத்திற்கு அனுப்பிய பதிவு அஞ்சல் திரும்ப வந்து விட்டது என்றும், மேற்படி வாதியின் வழக்குரைஞரின் அறிவிப்புக்கு 3-ம் பிரதிவாதி 23.11.2021-ம் தேதியில் பல பொய்யான சங்கதிகளை கூறி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும், அதே போல் 2-ம் பிரதிவாதியும் கடந்த 30.11.2021-ம் தேதியன்று பல்வேறு பொய்யான சங்கதிகளை கண்டு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும், மேலும் வாதி பலமுறை நேரிலும் மற்றவர்கள் மூலமாகவும் கேட்டு கடனுறுதிச் சீட்டு வசூல் ஆகாததால் அவர் கடனுறுதிச் சீட்டின் அசல் மற்றும் வட்டி வசூல் செய்ய வேண்டி மேற்படி இவ்வழக்கினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறார் என்றும், வாதிட்டார்.

**6.3.** வாதி தரப்பில், வாதி தரப்பு வழக்கை நிரூபிக்க வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள வாதி வழக்குரையை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தினை ஆராய்கையில், வா.சா.ஆ.1 ஆனது, 12.01.2019-ல் எழுதிக்

கொடுக்கப்பட்டுள்ளது என்பதும் வா.சா.ஆ.1. கடன் தொகை ரூ.4,00,000/- வாதிக்கோ, அல்லது வாதியின் உத்தரவு பெற்றவருக்கோ வேண்டும் போது ஆண்டுக்கு 12% சேர்த்து கொடுப்பதாக பிரதிவாதியால் வாதிக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது. வா.சா.ஆ.2 15.11.2021 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பினை ஆராய்கையில் வா.சா.ஆ.1 கடனுறுதி தொகையை கேட்டு வாதியானவர் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பதும் வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.5-ன் மூலம் வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பினை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டுள்ளார் என்பதும் தெரியவருகிறது.

**6.4.** மேலும் வாதி தரப்பில் வா.சா.ஆ.1 தாவா புரோநோட்டினை நிரூபிக்க தாவா கடனுறுதிச் சீட்டில் கையெழுத்திட்ட திரு.ரவிச்சந்திரன் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.2 தன்னுடைய சாட்சியத்தில், "கடந்த 12.01.2019-ம் தேதியன்று 1-ம் பிரதிவாதியின் கணவரும் 2, 3 பிரதிவாதிகளின் தகப்பனாருமான P.V.ரங்கசாமி வாதியிடம் ரூ.4,00,000/-த்தை பெற்றுக் கொண்டு அதற்கு ஆதரவாக தகுந்த பிரதிபிரயோஜனத்தின் அடிப்படையில் அவரது குடும்ப அவரச செலவுக்கு ஆண்டுக்கு ஒன்றுக்கு ரூ.100/-க்கு 12% சதவீதம் வட்டி சேர்த்து கூடும் வட்டியையும், அசலையும் வாதிக்காகவது அல்லது அவரது உத்திரவு பெற்றவர்களுக்காகவது வேண்டும் போது செலுத்துவதாக ஒப்புக் கொண்டு மேற்படி வழக்கு கடனுறுதிச்சீட்டை எழுதி கொடுத்துள்ளார். அதன்படி ரூ.4,00,000/-த்தை காலஞ்சென்ற ரங்கசாமி 1-வது சாட்சியான என் முன்னிலையில் பெற்றுக்கொண்டார். மேற்படி வழக்கு கடனுறுதிச்சீட்டினை 2-வது சாட்சியானவரும் எழுதியவருமான T.திருமலைசாமி என்பவர் மேற்படி வாதியின் வீட்டில் வைத்து எழுதினார். மேற்படி காலஞ்சென்ற P.V.ரங்கசாமி அதைப்படித்து பார்த்து சரியென்று ஒப்புக்கொண்டு வழக்கு கடனுறுதிச் சீட்டில் இரண்டு கையொப்பங்கள் செய்தார். அதன் பிறகு நான் முதலாவது சாட்சியாகவும், கையொப்பம்

செய்தேன். அதன் பின்னர் T.திருமலைசாமி 2-வது சாட்சியாகவும் கையொப்பம் செய்தார்." சாட்சியமளித்துள்ளார். எனவே வா.சா.2-ன் சாட்சியம் தாவா கடனுறுதித் சீட்டானது தகுந்த பிரதிபலனுக்கு பிரதிவாதியால் வாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்ற வாதி தரப்பு வழக்கையும் வா.சா.ஆ.1-யையும் நிரூபித்துள்ளது.

**6.5.** எனவே மேற்கண்ட பரிசீலனைகளின் படி, வாதி தரப்பு வழக்கானது வா.சா.1, 2 சாட்சியங்கள் மற்றும் வா.சா.ஆ.1 முதல் 8 வரையிலான ஆவணங்கள் மூலம் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பிரதிவாதிகள் இவ்வழக்கில் ஆஜராகியும் வாதி தரப்பு வழக்கை மறுத்தளித்து எதிர்வழக்குரை எதுவும் தாக்கல் செய்து, வாதி தரப்பு வழக்கை பொய்பிக்கும் வகையில் சாட்சியங்களோ சான்றாவணங்களோ சமர்ப்பிக்கவில்லை. மாறாக இவ்வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளனர். மேலும் வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் இந்த வழக்கின் அழைப்பாணையை பெற்றுக்கொண்ட பிறகும் பிரதிவாதிகள் இந்த வழக்கில் ஆஜராகி வாதி தரப்பு வழக்கிற்கு மாறான எதிர்வழக்குரை எதுவும் தாக்கல் செய்யவில்லை. ஆனால் வாதி தரப்பு வழக்கானது சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மேற்கண்டவாறு நிருபிக்கப்பட்டுள்ளது. எனவே பிரதிவாதிகள் தாவா தொகையை பின்வட்டியுடன் வாதிக்கு செலுத்த கடமைப்பட்டவர் என்று முடிவு செய்து அவ்வாறே தீர்வு செய்யப்படுகிறது.

**7.** முடிவாக இந்த வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. பிரதிவாதிகள் வாதிக்கு தாவா தொகை ரூ.5,40,266/- செலுத்த வேண்டுமென்றும், தாவா தாக்கலான தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை அசல் தொகைக்கு 9% ஆண்டு வட்டியும், பின்னிட்டு தாவா தொகை வசூலாகும் நாள்வரை அசல் தொகைக்கு 6% ஆண்டு வட்டியும் செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்துப் பார்த்து பிழைத்திருத்தங்கள் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N SHARMILA
Digitally signed by N SHARMILA
Date: 2023.05.11 10:55:06 +0530

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

**விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:**

**வாதி தரப்பில்** :

1. வா.சா.1 – திரு.சிவனப்பன் (வாதி)
2. வா.சா.2 - திரு.ரவிச்சந்திரன்

**பிரதிவாதிகள் தரப்பில் :** - இல்லை -

**வாதி தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 12.01.2019 | வழக்கு கடனுறுதிச் சீட்டு | அசல் |
| வா.சா.ஆ.2 | 15.11.2021 | வாதி வழக்குரைஞர் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய பதிவு அறிவிப்பு (ரசீதுடன்) | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 16.11.2021 | 1-ம் பிரதிவாதி பெற்றுக்கொண்ட அஞ்சலக ஒப்புகை அட்டை | அசல் |
| வா.சா.ஆ.4 | 17.11.2021 | 2-ம் பிரதிவாதி பெற்றுக்கொண்ட அஞ்சலக ஒப்புகை அட்டை | அசல் |
| வா.சா.ஆ.5 | 16.11.2021 | 3-ம் பிரதிவாதி பெற்றுக்கொண்ட அஞ்சலக ஒப்புகை அட்டை | அசல் |
| வா.சா.ஆ.6 | 24.11.2021 | 1-ம் பிரதிவாதியின் மற்றொரு முகவரியில் இருந்து திரும்பி வந்த பதிவு அறிவிப்பு அஞ்சல் உறை | அசல் |
| வா.சா.ஆ.7 | 23.11.2021 | 3-ம் பிரதிவாதி அவரது வழக்குரைஞர் மூலம் வாதி வழக்குரைஞருக்கு அனுப்பிய பதில் பதிவு அறிவிக்கை | அசல் |
| வா.சா.ஆ.8 | 30.11.2021 | 2-ம் பிரதிவாதி அவரது வழக்குரைஞர் மூலம் வாதி வழக்குரைஞருக்கு அனுப்பிய பதில் பதிவு அறிவிக்கை | அசல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:</u>** - இல்லை -

N SHARMILA
Digitally signed by N SHARMILA
Date: 2023.05.11 10:55:13 +0530

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.